12 சதவிதம் கூட்டிக் கொடுக்கிறார்கள். அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு அப்படியில்லாமல் முந்தைய ஆண்டு எவ்வளவு கொடுக்கப்பட்டதோ அதே அளவு டீசலை மட்டும் தான் கொடுத்தார்கள். அதிகமாகக் கொடுக்கப்படும் அந்த 12 சதவீதத்தைக் கொடுக்கவில்லை, அதனால்தான் குறைவாகக் கொடுக்கிறார்கள் என்றும் சொல்வதற்கில்லை, தேவைக்குப் போதுமானது என்றும் சொல்ல முடியாது என்று குறிப்பிட்டேன். ஏற்கெனவே மின்சாரத் தட்டுப்பாடும் இருப்பதால் விவசாயிகளுக்கும் டீசல் தேவைப்படுவதாக இருக்கிறது. அதனால் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மை. பற்றாக்குறை ஏற்படுகிற நேரத்தில் சில ஸ்தாபனங்களில் பிளாக் மார்க்கெட் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். நம்முடைய நாட்டில் அது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இருந்தாலும் யார் யார் தவறு செய்கிறார்கள் என்று கண்டுபிடித்து அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை எல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் எந்தெந்த வகையில் எல்லாம் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்குப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறோம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற்சாலைக்கு தண்ணீர் கொடுப்பது குறித்து அரசு ஒப்பந்தமும், விவசாயிகள் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'தாமிரபரணி ஆற்றிலிருந்து தூத்துக்குடி 'ஸ்பிக்' உரத் தொழிற்சாலைக்கு தண்ணீர் கொடுக்க அரசு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதால், விவசாயிகளுக்குப் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்த' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், தே. ஞானசிகாமணி ஆகியோர் சார்பில் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

'தாமிரபரணி ஆற்றிலிருந்து தூத்துக்குடி ஸ்பிக் உரத் தொழிற்சாலைக்கு தண்ணீர் கொடுக்க அரசு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதால், விவசாயிகளுக்கு பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்து'

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, தற்போது தூத்துக்குடியில் செயல்பட்டு வரும் 20 மில்லியன் கேலன் நீர் வழங்கும் திட்டத்தின் கீழ் மருதூர் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைப் பகுதியில் உள்ள கால்வாய்களில் கசிந்து வீணாகும் நீரை, கால்வாய்களை லைனிங் செய்வதன் மூலம் மிச்சப்படுத்தி ஸ்பிக் மற்றும் இதர தொழிற்சாலைகளுக்குத் தேவையான அளவு வழங்கப்படுகிறது.

எனவே தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்குவதால் பாசன நீர் வினியோகம் பாதிக்கப்படவில்லை. ஆற்றிலிருந்து கிடைக்கப்பெறும் நீரை வழங்குவதில் இன்னமும் நீர்ப்பாசனத்திற்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே நீர்ப்பாசனத்திற்குத் தான் முதல் உரிமை கொடுப்பதாகச் சொல்கிறார்கள். லைனிங் செய்வதன் மூலம் மிச்சப்படுத்தும் தண்ணீரைத்தான்—கசிந்து வீணாகும் தண்ணீரைத் தான் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். நீர்ப்பாசனத்திற்கு முன்உரிமை கொடுக்கப்படவில்லை என்பதற்கு சில விவரங்களை இப்போது சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அமைச்சருக்குத் தவறான தகவல் கொடுத்து இருக்கிறார்கள். சென்ற ஆண்டு கூட மருதூர், ஸ்ரீவைகுண்டம் பகுதியில் உள்ள மக்களுக்கு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தண்ணீர் கொடுக்கப்படவில்லை. ஸ்பிக் கிற்குக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அந்த வருஷத்திலேயே விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, நீர்ப்பாசனத்திற்கு முன்னுரிமை என்று சொல்கிறபோது, அவர்களுக்குக் கொடுத்ததுபோக மீதம் உள்ளதைத்தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதுபோல் லைனிங் செய்வதன் மூலமாக வீணாகாமல் கிடைக்கக்கூடிய நீரைத்தான் இன்றைக்கு ஸ்பிக் போன்ற உரத் தொழிற் சாலைக்குக் கொடுத்து வருகிறோம். நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் இல்லாமல் விவசாயிகளுக்குப் போகும் அளவில் எந்தவிதமான திட்டத்தையும் இந்த அரசு திட்டவில்லை. அது இந்த அரசின் குறிக்கோளும் அல்ல. ஆகவே, நீர்ப்பாசனத்திற்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு, எஞ்சியுள்ள நீர்தான் உரத்தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. உறுப்பினர் கூறுகிற அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அப்படி இருந்தால் கண்டிப்பாக அதுபற்றி பரிசிலனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே கசிவுநீரைத் தான் ஸ்பிக் உரத்தொழிற்சாலைக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள். தாமிர பரணி ஆற்றில் இருந்தும், மருதூர் அணையில் இருந்தும் தண்ணீர் விட

வேண்டும் என்று கேட்ட நேரத்தில், விவசாயிகளுக்குத் தண்ணீர் இல்லாமல் போனாலும் பரவாயில்லை, ஸ்பிக்கிற்குப் போகட்டும் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை நிச்சயமாக கண்டிக்கக் கூடியது. ஆகவே, அந்த நிலையைப் போக்குவதற்கு இந்த ஸ்பிக் உரத் தொழிற்சாலை ஒரு பெரிய ஆழ் கிணறு தோண்டி அதன் மூலமாகத் தண்ணீர் எடுத்து பயன்படுத்திக் கொள்கிற அளவிற்கு ஆலோசனை கூறி, அதை அமலாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கசிவு நீர் என்பது தண்ணீர் செல்கிற வாய்க்கால்கள் லைனிங் செய்யப்படுவதால் கிடைக்கக்கூடிய அதிகப்படியான நீர் ஆகும். லைனிங் செய்யப்படாமல் விட்டு விட்டால், அந்த வீணாகிப் போகிறது. அந்த நீர்தான் நிலத்தடி நீராகப் போய்விடுகிறது. ஆகவே லைனிங் செய்வதன் மூலம் அந்தக் கசிவு நீரை உரத்தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த உரத் தொழிற்சாலைக்கு ஒரு பெரிய ஆழ் கிணறு தோண்டுவதன் மூலம் அவர்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் தொடர்ந்து நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுமானால் கண்டிப்பாக உங்களுடைய யோசனை ஏற்றுக்கொள்ளப்படும்.

(6) தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகளை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் 9-ம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி கடைசி நாள் கேளுங்கள். 30-ம் தேதி கேளுங்கள்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: அவர் கொடுத்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. இன்றைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னீர்களாம். ஆகவே, அவரைப் பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இன்றைக்குத் தயாராக இருந்து இருந்தால் எடுத்துக்கொண்டு இருப்பேன். அதில் பிரச்னை இல்லை. இன்று வரவில்லை. கடைசிநாள் அந்தப் பிரச்சினை என்ன என்பதை அவர் அவையில் தெரிவிக்க நிச்சயமாக அனுமதிக்கிறேன். இன்று வேண்டாம்.